# ப்ராம்ப்ட்டன் விவசாயிகள் சந்தையில் திருமணம் புரிந்துகொள்ளுங்கள்!

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 23, 2022) – ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது, ஜூலை 23, 2022 தேதியன்று, பொதுமக்களுக்கான திருமண வைபவங்கள் பற்றிய ஒரு சிறப்பு முன்னெடுப்பினை வழங்குகிறது. நீங்களும் உங்கள் துணைவரும் ஒருவருக்கு ஒருவர் பரஸ்பரம் சத்தியவாக்குகளைப் பரிமாறியபடி, விவசாயிகள் சந்தை நடக்கும்போது, அழகிய கேஜ் பார்க் கஸீபோ (Gage Park gazebo) வில் வைத்து அதிகாரபூர்வமாக திருமணம் புரிந்துகொள்ளலாம்; இதற்காக நீங்கள் செலுத்த வேண்டியது $75 மட்டுமே!

குறைவான இடங்களே உள்ளன. **ஜூலை 13, 2022** தேதியில் நேரில் வந்து முன்பதிவு செய்யுங்கள்**.**

முன்பதிவுக் கட்டணத்தை முன்பதிவின்போது முழுமையாக செலுத்திவிட வேண்டும். செல்லத்தக்க திருமணம் உரிமத்தை முன்பதிவின்போது சமர்ப்பிக்க வேண்டும் அல்லது முன்பதிவின்போது வாங்கிக்கொள்ள வெண்டும் ($160).

திருமண உரிமத்திற்கான முன்பதிந்த சந்திப்புக்களை www.brampton.ca/skiptheline யில் செய்து கொள்ளலாம் அல்லது நகர்மன்றத்தில், திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8:30 மணி முதல் மாலை 4 வரை நேரில் வந்து செய்து கொள்ளலாம்.

**திருமண உரிமங்கள்**

நீங்கள் திருமணம் செய்துகொள்ள திட்டமிடுகிறீர்களா? ஒன்ட்டாரியோவில் திருமணம் செய்துகொள்ளும் முன்னதாக நீங்கள் ஒரு உரிமம் பெறுவது அவசியமாகும். திருமண உரிமம் பெறுவதற்கான தேவைப்பாடுகள் மற்றும் கால அவகாசங்களைப் பற்றி ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகத்தினரிடமிருந்து தெரிந்து கொள்ளவும்.

-30-

**ஊடக தொடர்பு**

ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்

multiculturalmedia@brampton.ca